# தேர்தல் பிரச்சாரக் கூட்டமா – திருவாரூர் தேரோட்டமா என வியக்கும் வண்ணம்

# தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை கேட்க அலைஅலையாய் திரண்டனர் காண்!



## மாநிலத்தின் வளர்ச்சியைத் தடுக்கும் பா.ஜ.க. – அ.தி.மு.க. கூட்டணியைப் புறக்கணிப்பீர்!

# தமிழ்நாட்டைக் காக்க - தி.மு.க.தான் மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும்!

## திருவாரூரில் நடைபெற்ற மாபெரும் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில்

## தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

திருவாரூர், ஏப்.2 -

**கழகத் தலைவரும் - முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.03.2026) திருவாரூரில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து உரையாற்றுகையில், "திருவாரூர் என்றால் அது தி.மு.க. ஊர்! அதனால்தான் பரப்புரையை இங்கிருந்து தொடங்குகிறேன். தமிழ்நாட்டைக் காக்க வேண்டும் என்றால், தி.மு.க.தான் மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும்! தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து நடைபோட வேண்டும் என்றால், தி.மு.க. ஆட்சியில் தொடர வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.**

**கழகத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

2026 சட்டமன்றத் தேர்தலின் 'சூப்பர் ஸ்டாராக' விளங்கிக் கொண்டிருக்கும் தேர்தல் அறிக்கையை நேற்று முன்தினம் அண்ணா அறிவாலயத்தின் கலைஞர் அரங்கத்தில் வெளியிட்டேன். நேற்று, தலைவர் கலைஞர் அவர்கள் வாழ்ந்த கோபாலபுரம் இல்லத்தில் இருந்து புறப்பட்டு, கொளத்தூர் தொகுதியில் என்னுடைய வேட்புமனுவைத் தாக்கல் செய்தேன். இன்று, தலைவர் கலைஞரை வளர்த்தெடுத்த திருவாரூர் மண்ணிலிருந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் அமைந்திருக்கும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றிக்கான பிரச்சாரத்தை - பரப்புரையைத் தொடங்குகிறேன்.





கழகத் தலைவரும் –முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.3.2026) திருவாரூர் தெற்கு ரத வீதியில் நடைபெற்ற சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில், திருவாரூர் மாவட்ட கழகச் செயலாளரும், திருவாரூர் தொகுதி கழக வேட்பாளருமான பூண்டி கே. கலைவாணன், மன்னார்குடி தொகுதி கழக வேட்பாளர் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருத்துறைப்பூண்டி தொகுதி வேட்பாளர் மாரிமுத்து, எஸ்.டி.பி.ஐ. கட்சித் தலைவரும், நன்னிலம் தொகுதி வேட்பாளருமான முகமது முபாரக் ஆகியோரை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். இக்கூட்டத்தில், கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு,அமைச்சர் கே.என். நேரு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், செல்வராஜ் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பழனிசாமி, தலைமை நிலைய செயலாளர் பூச்சி முருகன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை. திருவாரூர் மாவட்ட கழக நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மக்களின் நன்மதிப்பைப் பெற்ற – கழகக் கூட்டணி வேட்பாளர்கள்!

திருவாரூர் என்றால் அது தி.மு.க. ஊர். அதனால் நான் இங்கிருந்து தொடங்குகிறேன். இந்த மேடையில் இருக்கும் இவர்கள், உங்களின் நன்மதிப்பை வாக்குகளாகப் பெற்று, எம்.எல்.ஏ.க்களாக, 17ஆவது சட்டப்பேரவைக்குள் நுழைய இருக்கும் நம்முடைய வெற்றி வேட்பாளர்கள்.

### திருவாரூரில் பூண்டி கலைவாணனுக்கு நல்லாதரவு தாரீர்!

திருவாரூர் சட்டமன்றத் தொகுதியைப் பொருத்தவரை, திருவாரூர் மக்களின் ஒவ்வொரு வீட்டிலும் நன்கு அறிமுகமான, இன்னும் சொன்னால், ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு உறுப்பினராக இருக்கும், மாவட்டச் செயலாளர் - நம்முடைய அருமைச் சகோதரர் பூண்டி கலைவாணன் களமிறங்குகிறார்.

தலைவர் கலைஞர் மறைந்த பிறகு, கலைவாணன் அவர்களைத் தேர்ந்தெடுத்து, அவருக்கு வாக்களித்து, வெற்றி பெற வைத்தீர்கள். இந்த முறையும், நம்முடைய பூண்டி கலைவாணன் அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்தில் திருவாரூர் மக்கள் உங்களின் வாக்குகளை அளித்து, பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

### தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை புதிய உயரத்திற்குக் கொண்டு சென்றவர், தம்பி டி.ஆர்.பி.ராஜா!

அடுத்து, மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியில், மன்னையில் பிறந்து சென்னையின் கோட்டையிலிருந்து, ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியைப் புதிய உயரத்திற்குக் கொண்டு சென்றுள்ள நம்முடைய தம்பி டி.ஆர்.பி. ராஜா களமிறங்குகிறார். நம்முடைய டி.ஆர்.பி. ராஜா அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்தில் மன்னார்குடி மக்கள் உங்களின் வாக்குகளை அளித்து, பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தொடர்ச்சி 13–ஆம் பக்கம்

## திருவாரூரில் ஆர்ப்பரிப்புடன் பிரச்சாரம் ஆரம்பம்!

## கலைஞர் மண்ணில் கழகத்தின் வெற்றி உறுதியாகி விட்டது!



### தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

திருவாரூர், ஏப்.2-

தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

**திருவாரூரின் ஆர்ப்பரிப்போடு திராவிட மாடல் 2.0 ஆரம்பம்! தி.மு.க. தேர்தல் அறிக்கையின் ஒவ்வொரு அறிவிப்பையும் நான் சொல்லும் முன்பே மக்கள் அறிந்து ஆரவாரத்தோடு கூறுகிறார்கள்.**

**பரப்புரையின் முதல் நாளிலேயே நமது தேர்தல் அறிக்கையின் அபார 'Reach' ஆச்சரியமூட்டுகிறது.**

**கலைஞரின் மண்ணில் கழகத்தின் வெற்றி உறுதியாகிவிட்டதை உணர்கிறேன். ஏழாவது முறையாக அமையவுள்ள கழக ஆட்சியில் டெல்டா மண்டலத்தின் ஏற்றத்துக்கான சிறப்புத் திட்டங்கள் அணிவகுத்து நிற்கின்றன.**

**திராவிட மாடல் நல்லாட்சி தொடரட்டும்!**

**தமிழ்நாடு வெல்லட்டும்!**

இவ்வாறு முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.